RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt22s319

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கவிஞர் வைரமுத்து மூன்றாம் உலகப்போர் நாவலில் சமூக மாற்றங்களும் சூழலியல் பதிவுகள்

**செ. ஹேமலதா** [அ, *]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# Social Changes and Ecological Records in Poet Vairamuthu's Third World War Novel

**S. Hemalatha** [a, *]

[a] PG Tamil & Research Department, Chellammal Womens College, Guindy, Chennai–600032, Tamil Nadu, India

* Corresponding Author: lhhemalatha28@gmail.com

Received: 20-04-2021
Revised: 19-04-2022
Accepted: 26-04-2022
Published: 16-07-2022

Check for updates

## ABSTRACT

Ever since the inception of Novel, its subject matter revolves around man and the society in which he lives. When Novels were dealing with human life and reflecting every facet of history, came poet Vairamuthu's 'Moondram Ulaga Por' discussing Globalization, Global warming and hurdles which are to be faced in the coming decades. This novel emphasis on the current farmer issues, water conservation ideas, protecting agricultural lands, the means by which people could take measures against global warming, the responsibility of every individual and society together with a note of warning. Emily and Ishimura being the central characters, this novel covers the issues across the globe from America's Louisiana Shore to Japan's Sendai Beach along with the chemical leakage in Karuthammaye well in Attanampatty village in Theni. The objective of this dissertation is to depict that the novel Moondram Ulaga Por insists the need to safeguard environment and to bring about the changes in the agriculture and gives the entire mankind a sheer warning to awake and the changes to be experienced by the posterity also shows how the world is amazed at the knowledge, wisdom and hardwork of Tamil people.

**Keywords:** Pride of Plowing, Departmental Discrimination, Vairamuthu, Record of Status of Farmers, Globalization.

## முன்னுரை

இப்புதினத்தின் தொடக்கத்தில் மானுடம் வெல்வதற்கு என வைரமுத்து அவர்கள் கொடுத்துள்ள முன்னுரையிலேயே புதினத்தின் சாராம்சம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் மூன்றாம் உலகப்போர் என்று ஒன்று மூளுமா? மூண்டால் அது ஆயுதங்களை முன்னிறுத்தி நிழுமா? நிகழாது என்றே கருதப்படுகின்றது என்று அவர் கூறிய கூற்று இன்று நிகழ்ந்து கொண்டுள்ளதைக் காண்கிறோம். கொரோனா என்ற கொடிய வைரஸை பரப்பி உலக மக்களை அழித்தும், ஆக்ஸிஜனுக்காக அலைகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதையும் நம் கண்ணெதிரே காணும் நிகழ்ச்சிகளாக உள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்பே ஆசிரியர் இவ்வாறு கூறியுள்ளார். ‘இப்போதும் ஒரு போர் தொடங்கி நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது தன் வடிவத்தை மாற்றிக்கொண்டு. இது முகத்துக்கு முகம் பாரத்து மோதாத போர்; ஆயுதங்களை ஒளித்துக் கொண்டு நிகழ்த்தும் போர்; மண்ணுக்கும் விண்ணுக்குமான போர்; மனிதனுக்கும் இயற்கைக்குமான போர்; இது மனித குலம் சந்தித்திராத மோசமான

முகமூடிப்போர்; புவிவெப்பமாதல்-உலகமயமாதல் என்ற இரண்டு சக்திகளும் வேளாண்மைக்கு எதிராகத் தொடுத்திருக்கும் விஞ்ஞானப் போர். இந்தப்போரில் இயற்கையை எதிர்த்து மனிதன் வென்றாலும் மனிதனை எதிர்த்து இயற்கை வென்றாலும் தோற்கப் போவதென்னவோ மனிதன்தான் (Vairamuthu, 2008).

திணைப்பாகுபாடு, பழங்குடியினரின் இயற்கையோடு இணைந்த வாழ்வு, இயற்கை உரங்கள், மண் வளம் காத்தல், நிலத்தடி நீர் சேமிக்கும் முறை, இயற்கையைப் பாதுகாக்க செய்ய வேண்டிய கடமைகள், இயற்கையோடு மனிதன் நடத்தும் போராட்டமே மூன்றாம் உலகப் போராக உருவெடுத்த நிலை, ஆதிக்குடியினரின் இயற்கை வேளாண்மையை தொடங்க வேண்டும் என்ற முடிவு விவசாயம் ஒன்றே இவ்வுலகை காக்கும் என்கின்ற முடிவைத் தருவதாக இப்புதினம் இவ்வுலகிற்கு அறிவுறுத்துகிறது.

## உழவின் பெருமை

உழவினால் உணவைப் பெற்று வாழ்கின்றனர் உழவர்கள். மற்றவர்களெல்லாம் அவரை வணங்கி உண்டு அவர் பின்னால் செல்கின்றனர் என்று உழவின் பெருமையைக் கூறுகிறது திருக்குறள்

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்”

உணவு தேடும் வாழ்க்கை முறை மாறி உணவு உற்பத்தி செய்யும் முறைக்கு வந்த வேளாண் சமுதாயம் மனிதனுக்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்துள்ளது. நாடோடியாகத் திரிந்த மனிதன் வேளாண்குடியாக மாறியதன் பொருட்டே நால்வகை நிலம் எனும் பாகுபாடு தோன்றியது (Vararadarasan, 2009).

## திணைப்பாகுபாடு

சங்க இலக்கியத்தை நெறிப்படுத்துகின்ற இலக்கிய மரபு பழந்தமிழ்நாட்டை ஐந்து சுற்றுச்சூழல்கள் உள்ள ஒரு பிரதேசமாக வகைமைப்படுத்துகின்றமையைக் காட்டுகின்றது. மலைநாடு (குறிஞ்சி), காடுகளை ஒட்டியமைந்த மேய்ச்சல் நிலம் (முல்லை), வேளாண்மைக்குரிய பரந்து கிடக்கும் நிலம் (மருதம்), கடற்கரையை அடுத்துள்ள மணல்வெளிப்பகுதி (நெய்தல்), மற்றும் பயன்படுத்தப்படாத வறண்ட பகுதி (பாலை), இவற்றுள் முதல் நான்கும் இயற்கைப் பிரிவுகளே, பாலையோ வனவள ஆதாரங்களை அழிப்பதாலும் மற்றும் வேளாண் நிலம் அதன் பண்பிழப்பதாலும் தோன்றுவது. பண்டைத்தமிழரின் இப்பிரிவாக்கம், மானுடவியலாளர்களாலும் சூழலியலாளர்களாலும் இன்றையதினம் புகழப்படுகின்றது (Kaarthikesu Sivathambi, 2007). இப்படி இயற்கையாக மாறும் பாலை நிலம் மக்களின் சுயநலத்திற்காக உருவாக்கப்படுவதை மூன்றாம் உலகப்போர் என்ற புதினத்தின் வழியாக காணமுடிகின்றது.

## ‘வனவளம் காப்போம்

வாழக்கையை மீட்போம், அறிவிப்பு சொன்னாளே அவள அடிக்கிற வேகத்துல அடிச்சான் ரேடியோவ “அடியே ஆத்தா ரேடியோக்காரி. ஐ.நா. சபை பேச்சைக் கேட்டா எங்க அடுப்பு என்னைக்கு எரியறது? சுக்கா வறுவலுக்கும் சோடா கலக்காத சாராயத்துக்கும் உங்க ஐ. நா. மாமனா வந்து படியளக்கப் போறான்? உங்க வேலய நீங்க பாருங்கடி; எங்க வேலய நாங்க பாக்குறோம்”. பாறைய விட்டு மளார்னு தவ்வி மரம் அறுத்த சக்கைய மோந்து பாத்தான். “வாசனை சொல்லுதய்யா வயச. எழுபதுல இருந்து எழுபத்தஞ்சு இருக்கும் மரத்ததோட வயசு’ என மரங்களின் வகைகளையும் வயதையும் கணக்கிட்டு அவற்றை வியாபாரமாக்கிக் கொண்டிருந்தான் முத்துமணி (Vairamuthu, 2008). கருத்தமாயி என்னும் விவசாயியின் மூத்தமகன் முத்துமணி வனத்துறையில் பணிசெய்து கொண்டு வனத்தைப் பாதுகாக்க வேண்டியவன், மரங்களை வெட்டி கடத்தல் வேலைசெய்து இயற்கைக்கு

குந்தகம் விளைவிக்கின்றான். 'சந்தனம், தேக்கு, தோதகத்தி, கருநொச்சி, குமிழ் மரம், மஞ்சக்கடம்பு, சந்தனவேம்பு, பலாமரம், கருங்காலி, குங்கிலியம் வகைக்கொரு மரமா வந்து வாய்ச்சிருச்சு அன்னைக்கு, ரெண்டு யானைக சேந்தாத்தான் தூக்க முடியும் ஒரு மரத்த, மனுசங்க கூடி என்ன செய்ய முடியும்?' என்கிற அளவிற்கு மரங்களை வெட்டி வனத்தை அழிப்பதும், தன் சொந்த கிராமத்தில் உள்ள நிலங்களை விற்றும் இயற்க்கைக்கு ஒவ்வாத வேலைகளை செய்பவனாக இன்றைய மக்களின் செயல்களை வெளிக்காட்டும் ஒரு கதாபாத்திரமாக படைத்துள்ளார் (Vairamuthu, 2008). இத்தகைய செயலைத் தடுக்கும் வேலையை செய்பவனாக கருத்தமாயியின் இளைய மகன் சின்னப்பாண்டி செய்கிறான் தன் சொந்த கிராமம் தூய்மையாகவும் வளத்துடனும் மாறவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடுகின்றான். குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து குப்பைகளிலிருந்து இயற்கை உரம் தயாரித்து அதன் மூலமாக செடிகளை ஒவ்வொரு வீட்டிற்கும் தருகிறான்.

## நீர் மாசுபாடு

நீர் மாசடைதல் குறித்த பதிவாக சாயக் கழிவுகள் கிணற்றில் கலப்பதைக் காட்டும் பகுதியாக இது அமைகின்றது. 'ஏற்கனவே மழை இல்ல - தண்ணி இல்ல - உழுக மாடில்ல - ஒண்ட நெழல் இல்ல. வயித்துல ஈரத்துணியக் கட்டிப் படுத்திருக்கான் வெவசாயி. இந்த லச்சணத்துல கெணத்துத் தண்ணி ரத்தமா ஒழுகுதுன்னா வகுத்துல தீப்புடிக்குமா புடிக்காதா?' என கிணற்றில் கலக்கும் ரசாயணக் கழிவு நீர் குறித்த செய்தியை குறிப்பிடுகின்றார் (Vairamuthu, 2008). மேலும் மக்கள் அது குறித்த அறிவு பெறாதநிலையும் வெளிப்படுகின்றது. சின்னப்பாண்டி கண்டறிந்து உண்மையை ஊர் மக்களுக்கு தெரிவிக்கின்றான். 'கெணத்துல வடியிறது ரத்தமுமில்ல; சாமி குத்தமுமில்ல. கரட்டுல மில்லுக் கட்டியிருக்காகல்ல… மில்லு. அவுக சாயத்தண்ணியக் கழிவு வாய்க்கா வழியா கடத்திக்கிட்டிருக்காங்க. அந்தக் கழிவு தண்ணிதான் கசிஞ்சு நம்ம கெணறுகள்ல செந்தண்ணியா எறங்குது' என நீர் மாசுபாடு அடைதலை எடுத்துக்காட்டியுள்ளார் (Vairamuthu, 2008).

## மூன்றாம் உலகப் போர் விடுக்கும் எச்சரிக்கை

குறைந்த மழை, மாறிப்போன காலநிலை, உலகவெப்பமயமாதல், விவசாயிகளின் தற்கொலை என வழிவழியாய்த் தழைத்தோங்கிய விவசாயம் இன்று போராட்டத்தில் சென்று கொண்டிருப்பதை பத்து ஆண்டுகளுக்கு முன்னரே தன் புதினத்தின் வழியாக கூறியுள்ளார். மூன்றாம் உலகப்போர் ஆயுதத்தை உயர்த்தினால் மனித குலம் முற்றிலும் அழிந்து விடும். அதைவிடுத்து விவசாயிகளின் போராட்டமாக இயற்கையோடு போராடும் போராட்டமாக இப்போர் அமைகிறது என்பதை கூறியுள்ளார். இன்றைய கொரோனா என்னும் நோய் உலகை ஆட்டிப்படைக்க காரணமான வைரஸ் கிருமியை உருவாக்கி அதன் மூலம் ஒரு போரை ஏற்படுத்தியதை மறுக்க முடியாத நிலையில், விவசாயத்தை காக்க இயற்கையை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எச்சரிப்பதாக அமைந்துள்ளதை இப்பகுதியை காணலாம்

- 'உத்தரகாண்ட்டிலும் இமாச்சல பிரதேசத்திலும் பனியும் மழையும் குறைந்ததால் 9000 அடியில் விளைந்த ஆப்பிள் தோட்டங்கள் 12000 அடிக்கு மலையேறிவிட்டன.
- மழைக்காலம் ஏப்ரலுக்கு மாறிப்போனது அதை அறியாமல் வழக்கமாய்ப் பூக்கிற ஆப்பிள் மலர்கள் மழையால் துடைக்கப்பட்டுவிடுகின்றன. தென்னிந்தியாவின் மாந்தோப்பு மலர்களைக் காலம் தப்பிய மழை கழுவி விடுவது மாதிரி பயிர்களில் தங்கம் வளர்க்கும் பஞ்சாபில் ஒரு டிகிரி வெப்பம் கூடியதில் 4.5 மில்லியன் டன் குறைந்து விளைகிறது கோதுமை.
- வடக்கே கோதுமை - தெற்கே நெல் இதுதான் இந்தியாவின் தானியக் கலாசாரம். நூறு நாட்களில் நான்கு பருவங்கள் வேண்டும் தமிழ்நாட்டு நெல்லுக்கு. ஒரு மழை - ஒரு குளிர் - ஒரு பனி - ஒரு வெப்பம் என்ற நான்கு பருவங்கள் நிலை கொண்டுள்ளது ஒரு நெல்மணி. ஆனால் புவிச்சூட்டில் பருவங்கள் மாறிப்போனதில் தலைசுற்றிப் போனான் தமிழ்நாட்டு விவசாயி. கடைசியில் மனிதனுக்கு நட்ட நெல் மாட்டுக்கும் தேறவில்லை.

- மகாராஷ்டிரா மாநிலம் விதர்பாவிலிருந்து வருகிறேன். என்னை மன்னிக்க வேண்டும் - என் இதயத்தைப் பிடித்துக் கொண்டு இதைச் சொல்லுகிறேன். உணவில்லாதவன் செத்துப் போன தேசங்களைப் பாரத்திருக்கிறேன். உணவு தருகிறவன் செத்துப் போவதை இங்குதான் பார்க்கிறேன். வெடித்த பருத்திக்கு விலை இல்லை என்பதனால் தற்கொலை செய்து கொண்டார்கள் விதர்பா விவசாயிகள் ஏன் விலையில்லை? உலக வர்த்தக அமைப்பின் புதிய கொள்கைகள் உறிஞ்சி விட்டன. அவர்கள் உயிரை வளர்ந்த நாடுகள் தங்கள் விவசாயிகளுக்குக் கொடுத்த மானியத்தால் சர்வதேசச் சந்தையில் சரிந்துவிட்டது பருத்தி விலை. விலையில்லாத இந்தியப் பருத்தி வெடிக்கும் போதே கறுப்பாக வெடித்தது. அது ஆயிரக்கணக்கில் விவசாயிகள் உயிரைக் குடித்தது கடைசியில் இந்தியாவில் வழங்கப்பட்ட குறைந்த மானியம் பயன்பட்டது மரணச் செலவுக்கு.
- 2050 -இல் இன்னும் இருபத்து மூன்று கோடி மக்கள் புதிதாக வரப் போகிறார்கள் பூமிக்கு. ஆனால் மூன்று சதவிகிதமாக இருந்த உலக தானிய உற்பத்தி இன்று ஒரு சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது.
- உணவுப் பிரச்சினைதான் இங்கு உயிர்ப்பிரச்சினை என்று எமிலி சொன்னதில் என்ன பிழை? ஆப்பிரிக்காவின் மண்ணின் வளம் இப்போது வீழும் விகிதத்தில் விழுந்து கொண்டே போனால் 2025-இல் இருபத்தைந்து சதவிகித மக்களுக்கு உயிரை ஒட்டி வைக்க ஒரு பருக்கை இருக்காது.
- புவிச்சூடு ஆண்டுக்கு மூன்று லட்சம் மக்களைக் கொன்றுவிட்டுப் போகிறது.
- 85 கோடி மக்கள் உட்டச்சத்தில்லாமல் வாழ்கிறார்கள் உயிரைப் பிடித்து.
- உலகத்தின் பத்துக்கோடி மக்கள் கடல்மட்டத்திலிருந்து மூன்றடி உயரத்தில்தான் வாழ்கிறார்கள்.
- இப்போதுள்ள கடல்மட்டம் மூன்றடி கூடினால் வங்கதேசத்தில் ஏழுகோடி மக்கள் இடம்பெயர நேரிடும். புவிச்சூடு கட்டுபடுத்தப்படாவிட்டால் இது நேரவே நேரும்.
- எமிலி மொழியில் சொல்வதானால் இயற்கைக்கெதிராக மனிதன் தொடுத்துவிடட மூன்றாம் உலகப் போர் மூண்டுவிட்டது' (Vairamuthu, 2008).

என பல்கலைக்கழக கருத்தரங்கில் பேசப்பட்ட கருத்துகளாக கொடுத்துள்ள செய்திகள் சுற்றுச்சூழலியலாளர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

## விவசாயிகளின் நிலை குறித்த பதிவு

இந்தியாவின் புவியியல் அமைப்பு சிறந்து விளங்குவதைக் குறித்த செய்திகளை இப்புதினத்தின் வழியாக எடுத்துரைப்பதைக் காணலாம். 'உயர்ந்த பூமி உங்கள் பூமி பூகம்பத்தால் நொறுங்காத - எரிமலையில் வெந்து போகாத - சுனாமியால் சூறையாடப்படாத பூமி இது. மக்கள் நல்லவர்கள். எருதுகளைப் போல் உழைக்கிறவர்கள். உங்கள் புளியமரங்களைப் போல் பஞ்சம் பொறுக்கிறவர்கள். அவர்களைப் படித்த இளைஞர்கள் பாதுகாக்க வேண்டும். இந்த மண்ணே கோயில்; மக்களே கடவுள்கள்' (Vairamuthu, 2008).

இங்குள்ள மக்களின் அறிவுத் திறம் குறித்து கூறுவதாக அமைந்த பகுதியாக இதைக் காணலாம். 'நான் கவனித்த வரையில் கூர்த்தமதி மிக்கவர்கள் இந்த மண்ணின் மக்கள்; வேட்டைக் கலாச்சாரத்தின் எச்சங்கள். வேட்டையாடுகிறவன் வீரன்; வேட்டையாடப்படாமல் தன்னைக் காத்துக் கொள்கிறவன் விவேகி, வீரமும் விவேகமும் இவர்களின் உதிரத்தின்வழியே ஓடிக்கொண்டிருக்கின்றன. கல்வி மறுக்கப்பட்டதால் மரபுவழி பெற்ற அறிவைத் தவிர இந்த தேசம் சேமித்து வைத்த ஞானத்தில் இவர்களுக்குப் பங்கு இல்லை. என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிய கண்டுபிடிப்பு இதுதான். உடல் மட்டும்தான் இவர்களின் ஒரே மூலதனம். உடலையே விற்கிறவள் பாவம் விபசாரி ஆகிறாள். உடலை விற்கிறவன் விவசாயி ஆகிறான். ஊரும் வீடும் இருண்டே கிடக்கின்றன. உங்கள் தேசம் நிலாவுக்கு விண்கலம் அனுப்புவது மகிழ்ச்சிதான். அதற்குமுன் இவர்கள் வீட்டுக்கு வெளிச்சம் அனுப்ப வேண்டும்'

என விவசாயிக்கு அரசு செய்ய வேண்டிய வசதிகளை எடுத்துக் கூறுவதாக இப்பகுதி உள்ளது (Vairamuthu, 2008).

## உயிர்ச்சூழல்

பூமியின் கற்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம் எனும் பகுதிகளை ஒருங்கிணைந்த உயிர்க்கோளம் அமைந்துள்ளது. இங்கு உயிர்வாழும் அங்கிகள் காணப்படுகின்றன. உயிரினங்கள், தாவரங்கள், வளி, நீர், கனியங்கள் முதலியன. சூழல் தொகுதியின் கூறுகளாகவுள்ளன. இவை அனைத்தும் ஒருங்கிணைந்து உயிர்க்கோளத்தினை (Biosphere) உருவாக்கியுள்ளன. உயிர்ச்சூழலில் உயிர் வாழும் அங்கிகளும் உயிரற்ற அங்கிகளுமுள்ளன. அவற்றிடையே இணைப்பும் இயக்கமுமுள்ளன. மண், பாறை, நீர், வளி, தாவரங்கள் கைப்பற்றி வைத்திருக்கும் சூரிய சக்தி என்பன. தாவரம், உயிரினங்கள் என்பன உயிருள்ள அங்கிகளாகும். உயிருள்ள அங்கிகள் (1) உற்பத்தியாளர்கள் (Producers) (2) நுகர்வோர் (Consumers) எனப்படுவர் (Kallanithi Gunarasa, 2007). இவ்வகையான உயிரிகள் வாழும் மண்ணின் தன்மையை உணராதவர்களாக விவசாயிகள் இருப்பதும் அவர்கள் அறிந்து கொள்ளும் படி மண்ணின் தன்மையை எடுத்துக் கூறும் விதமாக இப்புதினத்தில் இடம்பெறும் உரையாடலாக இது அமைந்துள்ளது.

இரசாயண உரங்களை மண்ணில் இடுவதால் மண்ணின் வளம் அழிந்து போகும் என்பது அனைவரும் அறிந்த செய்தி என்றாலும் இயற்கை உரங்களை இட்டு விவசாயம் செய்வதால் மண்ணின் உயிர்ப்புத் தன்மை காக்கப்படும் என்ற செய்தியை இப்புதினம் கூறுகிறது. ‘உங்களுக்கும் எனக்கும் உயிருள்ளதைப்போல் மண்ணுக்கும் உயிருள்ளது. அதனால்தான் அது ஈனுகிறது.’ ‘சின்னப்பாண்டி. உன் தந்தைக்கு இதை நீ சொல்லித் தரவில்லையா? மண் என்பது ஜீவராசிகள் தங்கி வசிக்கும் உயிர்க்கூடு கண்ணறியாத நுண்ணுயிர்களை - காளான் உயிரிகளை-மண்புழுக்களை - பாசி இனங்களை - ஈச்சிகளின் கருமுட்டைகளை - ஒன்று கூட்டி வைத்திருக்கும் உயிர்த்தொகுதிதான் மண். மண்ணுக்குத் தனியாக ஆற்றல் ஏது? இந்த உயிர்த்தொகுதியின் உந்துசக்திதான் மண். புதைக்கப்பட்ட விதைக்கு ஜனனம் தருவதே அந்த நுண்ணுயிர்கள்தாம். கடப்பாரைக்கு உடையாத கரும்பாறை ஒரு தாவரத்தின் வேருக்கு நெக்குருகி நிற்கிறதே. எப்படி? எல்லாம் பாக்டீரியாக்கள் படுத்தும்பாடு. பாறைகளை உடைக்கும் பாக்டீரியா பழங்குப்பைகளை மக்கச் செய்யாதா, உலோகங்களையே கரைக்கும் அந்த உயிரணுக்கள் தாவரங்களின் வேர்களுக்குத் தாய்ப்பால் ஊட்டாதா, மண்ணை எது உயிரோடு வைத்திருக்கிறதோ அதைக் கொல்லுகிறீர்கள் ரசாயண உரம் தெளித்து. மண்ணைக் கொன்று விவசாயம் செய்கிறீர்கள். பிறகு பிணத்துக்கு எல்லோரும் கூடிப் பிரசவம் பார்க்கிறீர்கள். மண் என்பது ஜடமல்ல; அது ஓர் உயிரி மனிதக் கொலையிலும் கொடியது மண்கொலை’ (Vairamuthu, 2008).

இக்கருத்தை வலியுறுத்துவதாய் சுற்றுச்சூழலியலாளர் கூறுவதும் இதுவாகவே அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

## உலகமயமாக்கல்

‘உலகமயமாக்கல்’ என்ற விஷவிருட்சத்தின் நிழலில் வளர்ந்து இந்திய பெருவுடமையாளர்களுக்கும் ஆளுவோர்க்கும் பலன்தரும் பன்முக உற்பத்திக்கான உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி ஆற்றல்கள் ஆகியவற்றில் காந்தியத்தின் செயலூக்கத்தினால் நிகழவிருக்கும் தலைகீழ் மாற்றங்களை நிலைப்படுத்தும் வலிமை உருவாக்கத்தை இங்குள்ள சட்டங்களும் நீதியமைப்புகளும் அனுமதிக்குமா?

காந்தியம் வரைகிற உற்பத்தி முறைகள் அதாவது எந்திரங்கள் விலக்கிய கைத்தொழில்கள், பாரம்பரிய (முற்றிலும் இரசாயனம் தவிர்த்த) வேளாண்மைக்குப் பின்புலமாக அமையும் பாரம்பரிய விதைகள் மீட்பு, கால்நடைகள் பெருக்கம், காடுகளை வளர்த்தல், நீராதாரங்கள் பராமரிப்பில் மக்கள் பங்கெடுப்பு, உணவு முறைகளில் மாற்றம், தாய்மொழிக்கல்வி போன்றவற்றின் மீட்டுருவாக்கத்தில் அரசியல் கட்சிகளின் நிலை போன்றவையும் நிராகரிக்கவியலாக் காரணிகளாக அமைந்துள்ளன.

மேலும் மக்களின் மனதில் தங்கியுள்ள உயர்கல்வி, நவீனத்தொழில்நுட்பப் பயிற்சியின் வழி மிகுபொருளீட்டல், புதிய வாழ்க்கை முறை பற்றிய மயக்கங்களும் கற்பிதங்களும் கூடுதல் சிக்கல்கள், என்று கூறுவது சரியானதாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

'அடிப்படையில் இந்தியா வணிகச் சமூகமில்லை; விவசாயச் சமூகம் ஆனால் சிறுபாண்மை வணிகம் பெரும்பாண்மை விவசாயத்தை மென்று தின்றுகொண்டிருக்கிறது. சேவை, உற்பத்தி என்ற இரண்டு தளங்களில் சமமாக இயங்க வேண்டிய தேசத்தில் சேவைத்துறை விரிந்துகொண்டே போகிறது; உற்பத்தித்துறை சுருங்கிக் கொண்டே வருகிறது. விவசாயநாடு என்று சொல்லப்படும் தேசத்தில் விவசாயிதான் பட்டினி கிடக்கிறான்; தற்கொலைக்கும் தள்ளப்படுகிறான்' இதற்கான காரணமாக 'புவிவெப்பமாதல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல்' என விவசாயத்தின் வீழ்ச்சிநிலையைக் காட்டுகின்றது (Vairamuthu, 2008).

இந்திய விவசாயத்தின் திடீர் வீழ்ச்சி சர்வதேச நிதியத்தின் கடன் வாயிலில் கொண்டுபோய் நிறுத்தியது இந்தியாவை. நிதியம் விதித்த நிபந்தனைகள் தாராளமயமாக்கலில் தொடங்கி தனியார்மயத்தில் முடிந்தது. அரசு விதைப்பண்ணைகள் மூடப்பட்டதில் விதைகள் விலையேறிவிட்டன; போலி விதைகள் சந்தைக்கு வந்து விட்டன. ஏக்கருக்கு எழுபது ரூபாய்க்கு விற்ற விதை ஆயிரத்தைத் தொட்டது. விளைச்சலுக்கும் விதைக்குமான இடைவெளி ஆள் தாண்ட முடியாத அதலபாதாளமாய் விரிந்தது. என்ன செய்வார்கள் உங்கள் ஏழை விவசாயிகள்? உணவுப்பயிர் துறந்து பணப்பயிருக்கு தாவினார்கள், நெல்லும் சோளமும் கோதுமையும் விளைந்த நிலத்தில் கரும்பு மிளகாய் பருத்தி புகையிலை ஆக்கிரமித்தன. ராட்சசப் பசி கொண்ட அந்தப் பணப்பயிர்கள் 'உரம் போடு உரம் போடு' என்று ஏழை விவசாயிகளை எச்சரித்து நச்சரித்தன. உரத்துக்கான சர்வதேசச் சந்தை அந்தப் பற்றாக்குறையைப் பணமாக்கியது. உரவிலையை முந்நூறு சதவிகிதம் உயர்த்தி உறிஞ்சியது. புவிவெப்பமயமாதலில் விவசாயிகளின் வானம் மூடப்பட்டுவிட்டது. தனியார் மயமாக்கலில் விதை பிடுங்கப்பட்டு விட்டது. உலகமயமாக்கல் என்ற பந்தயத்தில் அவன் கால்கள் வெட்டப்பட்டுவிட்டன. என இன்றைய விவசாயத்தின் நிலை குறித்தும், விவசாயிகளின் நிலை குறித்தும் பேசப்பட்டுள்ளது (Vairamuthu, 2008).

## முடிவுரை

இப்புதினத்தின் வழி மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் இது. விவசாய மக்களின் பிரச்சினை மட்டுமல்ல உலகத்தின் பிரச்சினை இதைத் தீர்க்க என்ன வழிமுறைகளோ அதைச் செய்ய வேண்டும் அந்தக் கடமை அனைவருக்கும் வரவேண்டும் என இந்தப் படைப்பை அளித்துள்ளார். சுற்றுச்சூழலை பாதுகாப்போம் என்ற உறுதியும், இயற்கையை இயற்கையாகவே பாதுகாப்போம் என்ற எண்ணமும் ஒவ்வொரு மனதிலும் பதியப்பட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் முடிவாக அமைகின்றது.

## References

Kaarthikesu Sivathambi, (2007) Pandaith Thamizh Samoogam, New Century Book House, Chennai, India.

Kallanithi Gunarasa, K., (2005) Suttruch Choozhaliya, Lanka Puthaga Salai, Kozhumbu, Srilanka.

Vairamuthu, (2008) Moondram Ulaga Por, Suriya Veliyeedu, Chennai, India.

Vararadarasan, Mu., (2009) Tiruvalluvar, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License